# FORM-3
# MINUTES OF THE COUNCIL MEETINGS
## குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் சாதாரணக்கூட்டம் 2014 பிப்ரவரி திங்கள் 21–ம் நாள் (21.02.2014) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நகர்மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெற்றது.

முன்னிலை:
நகர்மன்ற தலைவர்
குளச்சல் நகர்மன்றம்.

**பொருள் எண். 1**

இந்நகராட்சி ஈப்பு வாகனம் TN 75 K.6526-ன் வலதுபுறம் அமைந்துள்ள றீயர் கம்பேனியன் லேம்ப் மற்றும் வென்ட்லேட்டர் அசெம்பிளி கவர் ஆகியவற்றில் விரிசல் ஏற்பட்டு சரியாக இயங்காமல் செயல் இழந்து விட்டதால், அவசர அவசியம் கருதி மேற்படி பழுதுகளை சரி செய்த வகையில் செலவு செய்யப்பட்ட தொகை ரூ. 1,054/– ஐ இந்நகராட்சி பொது நிதியிலிருந்து சம்மந்தப்பட்ட ஒட்டுநருக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
**அ.குறிப்பு** – மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/250/2014)

**தீர்மானம் எண்.835(அ) அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 2**

இந்நகராட்சிக்குட்பட்ட துறைமுகத்தெருவில் போர் வெற்றிச் சின்னம் அருகில் ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டில் பூங்கா அமைக்கும் பணிக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை தினமுரசு பத்திரிக்கையின் 31.01.2014–ம் தேதிய பதிப்பில் பிரசுரம் செய்த வகையில் ரூ.3,375/– ஐ வழங்க கேட்டு பட்டியல் பெறப்பட்டுள்ளது. எனவே மேற்படி தொகையினை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
**அ.குறிப்பு** – மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/121–1/2014)

**தீர்மானம் எண்.836(அ) அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 3**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட குழந்தை ஏசு காலனியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2011–12–ன் கீழ், ரூ. 2.50 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள ரேசன் கடையினை மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்கு ஏதுவாக மின் இணைப்பு பெறுவதற்கு ரூ.1600/–ஐ செலுத்த கேட்டு தமிழ்நாடு மின்சார வாரியம், குளச்சல் அலவலகத்திலிருந்து கடிதம் வரப்பெற்றுள்ளது. எனவே மேற்படி தொகையினை செலுத்துவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
**அ.குறிப்பு** – மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/2940/2013)

**தீர்மானம் எண்.837(அ) அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 4**

இந்நகராட்சிக்குட்பட்ட கிழக்கு கடற்கரை பகுதியில் சுற்றுலா பயணிகளை கவரும் வகையில் ரூ.60.00 இலட்சம் மதிப்பீட்டில் 3 இடங்களில் பூங்கா அமைப்பதற்கு திட்ட பிரேரணை சமர்ப்பிக்க இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.683 நாள் 31.07.2013–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில் இந்நகராட்சிக்குட்பட்ட மரமடி குருசடி அருகில் பூங்கா அமைப்பதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.**10.00** இலட்சத்தில் **90%** மான்யமாகவும், மீதமுள்ள **10%**ஐ இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்வதற்கும், திட்ட நிதியை எதிர்நோக்கி தற்போது பொதுநிதியில் பணியினை மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு –** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/2940/2013)

**தீர்மானம் எண்.838 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 5**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள மின்கம்பங்களில் புதிதாக தெருவிளக்குகள் அமைப்பதற்கு 8 எண்ணங்கள் விண்ணப்ப படிவம் மற்றும் வரைபடம் ஆகியவை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு அனுப்பப்பட்டது. அதன் அடிப்படையில் மேற்படி தெருவிளக்குகள் அமைப்பதற்காக ரூ.1,30,550/–ஐ மதிப்பீட்டு கட்டணமாக செலுத்த சம்மந்தப்பட்ட அலுவலகத்திலிருந்து கடிதம் வரப்பெற்றுள்ளது. எனவே மேற்படி தொகையினை செலுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**தெருவிளக்குகள் அமைக்கப்பட உள்ள இடங்கள்**

| | | |
|---|---|---|
| 1. | வார்டு எண். 2 | பொட்டல்விளை – 5 விளக்குகள் |
| 2. | வார்டு எண். 4 | சுனாமி காலனி சாலை – 3 விளக்குகள் |
| 3. | வார்டு எண். 16 | களிமார் – 1 விளக்கு<br>வாய்க்கால் தெரு – 1 விளக்கு |
| 4. | வார்டு எண். 20 | ரிபாய் பள்ளி தெரு – 2 விளக்குகள்<br>(மங்களா தெரு) |
| 5. | வார்டு எண். 23 | சாஸ்தான்கரை – 2 விளக்குகள் |
| 6. | வார்டு எண். 24 | புல்லன்விளை – 3 விளக்குகள் |

**அ.குறிப்பு –** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/4378/2010)

**தீர்மானம் எண்.839 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 6**

இந்நகராட்சியில் **26.01.2014** அன்று நடைபெற்ற குடியரசு தினவிழா கொண்டாட்டத்திற்காக ரூ.4,759/– செலவு செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்படி தொகையினை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு –** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.எச்1/227/2014)

**தீர்மானம் எண்.840 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 7**

இந்நகராட்சி அலுவலக உபயோகத்திற்கு தேவையான மேஜை, நாற்காலி ஆகியவற்றை The Kanyakumari District Co-op. Society Ltd., Nagercoil நிறுவனத்திடமிருந்து நேரடியாக கொள்முதல் செய்வதற்கும், அதற்கான செலவுத் தொகை ரூ. 1,11,800/– ஐ இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும், இந்நகர்மன்றம் தனது தீர்மான எண்.819 நாள் 30.01.2014–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அதன் பின்னர் TANSI FABRICATION WORKS, Rajapalayam நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட விலைப்புள்ளியில் பொருட்களின் விலைவிதிகம் முந்தைய நிறுவனத்தின் விலைவிகிதத்தைவிட குறைவாக இருந்ததால் TANSI FABRICATION WORKS, Rajapalayam நிறுவனத்திற்கு வினியோக உத்தரவு வழங்கப்பட்டது. எனவே மேற்படி பொருள் தொடர்பாக மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : 1) மேற்படி பொருள் தொடர்பான இந்நகர்மன்றத் தீர்மானம் எண். 819 நாள் 30.01.2014–ஐ ரத்து செய்யலாம்.

2) இந்நகராட்சி நிதிநிலையை கருத்தில் கொண்டு The Kanyakumari District Co-op. Society Ltd., Nagercoil நிறுவனத்தை விட குறைந்த விலை விகிதத்தில் விலைப்புள்ளி அளித்த TANSI FABRICATION WORKS, Rajapalayam நிறுவனத்திற்கு வினியோக உத்தரவு வழங்கியதற்கும், அதற்கான செலவுத் தொகையினை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/1871/2010)

**தீர்மானம் எண்.841 ஒத்திவைக்கப்பட்டது.**

**பொருள் எண். 8**

இந்நகராட்சி பொதுசுகாதார வாகனம் TN-75 L.2565 காம்பேக்டர் லாறியில் ஏற்பட்ட பழுதுகளை சரி செய்த வகையில் ரூ.700/– வழங்க திரு.உபைஸ், ஓட்டுனர் கேட்டுள்ளார். மேற்படி தொகை வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** – மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.எச்1/1841/2013)

**தீர்மானம் எண்.842 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 9**

இந்நகராட்சி ஆழ்துளை கிணறு எண்.4, 7, 13, 19 ஆகியவற்றில் மோட்டார்கள் மற்றும் கேபிள் பழுதடைந்ததால், குடிநீர் வினியோக பணிகள் பாதிக்கப்பட்டது. எனவே பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு, மேற்படி ஆழ்துளை கிணறுகளின் மோட்டார்களை மேலே தூக்கி சரி செய்து பொருத்தவதற்கு ரூ.41,000/–க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, நகராட்சி சட்டப்பிரிவு 15–ன் கீழ் பணியினை மேற்கொண்டு, பட்டியல் தொகை வழங்கியுள்ள விவரம் மன்றத்தின் பார்வைக்கும், தகவலுக்கும் வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.இ2/212/2014)

**தீர்மானம் எண்.843 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. பதிவுசெய்யப்பட்டது.**

**பொருள் எண். 10**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் 14.08.2013–ம் தேதியிட்ட மின்னஞ்சலில் குறிப்பிட்டுள்ளபடி, பொன்விழா ஆண்டு நகர்ப்புற வேலை வாய்ப்புத் திட்டம் 2012–13 கூடுதல் நிதி ஒதுக்கீடு (2012–13–ல் சென்னை மாநகராட்சியின் செலவு செய்யப்படாத தொகையினை சேர்த்து) கீழ்க்கண்ட விபரப்படி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மன்றத்தின் பார்வைக்கு.

| வ.எண். | பிரிவுகள் | | தொகை (ரூபாயில்) |
|---|---|---|---|
| 1 | சுய வேலை வாய்ப்புத் திட்டம் | USEP | 1,74,682 |
| 2 | மகளிர் சுயஉதவிக்குழு – குழுக்கடன் | UWSP | 1,31,011 |
| 3 | மகளிர் சுயஉதவிக்குழு – சுழல் நிதி | UWSP-RF | 43,670 |
| 4 | வேலை மேம்பாட்டுக்கான திறன் வளர்ச்சி பயிற்சி | STEP UP | 3,49,363 |
| 5 | கூலி வேலைவாய்ப்பு | UWEP | 1,18,085 |
| 6 | சமுதாய மேம்பாட்டு கூட்டமைப்பு | UCDN | 87,341 |
| | **மொத்தம்** | | 9,04,152 |

**அ.குறிப்பு** : மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.2707/2013/ச.அ)

**தீர்மானம் எண்.844 ஒத்திவைக்கப்பட்டது.**

**பொருள் எண். 11**

இந்நகராட்சி கணனி பிரிவில் இயங்கிவரும் கணனிகள் மற்றும் பிரிண்டர்களில் சுமார் 10 கணனிகள் மற்றும் 4 பிரிண்டர்கள் சுமார் 8 வருடங்களுக்கு மேலாகிவிட்டதால், சில கணனிகள் பழுதாகி, பழுது பார்க்க முடியாத நிலையில் உள்ளது. மேலும் சில கணனிகள் தற்போதுள்ள புதிய மென்பொருள் பயன்படுத்தும் போது வேகம் குறைவாக உள்ளது. எனவே பணியின் அவசியம் கருதியும் தேர்தல் பணிகள் வருவதை முன்னிட்டும் தற்போது 2 கணனிகள், 3 Dot matrix பிரிண்டர்கள் மற்றும் 2 லேசர் பிரிண்டர்கள் DGS&D விலை விகிதத்தில் சுமார் ரூபாய் இரண்டு இலட்சம் உத்தேச செலவில் வாங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** – மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.அ2/544/2006)

**தீர்மானம் எண்.845 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 12**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.2, கதவு எண்.2/82.பி. கட்டிடத்தின் குடிநீர் இணைப்பை தற்காலிகமாக துண்டிப்பு செய்ய கோரப்பட்டுள்ளது. எனவே மனுதாரரின் வேண்டுகோளை ஏற்று மேற்படி குடிநீர் இணைப்பை தற்காலிகமாக துண்டிப்பு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** – மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ2/257/2014)

**தீர்மானம் எண்.846 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 13**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.4, ஆசாத்நகர் பகுதியில் அமைந்துள்ள கதவு எண்.4–64/3 கட்டிடத்தின் குடிநீர் இணைப்பு தற்காலிகமாக துண்டிப்பு செய்யப்பட்டது. தற்பொழுது மீண்டும் மறு இணைப்பு வழங்க கோரி விண்ணப்பித்துள்ளார். எனவே மனுதாரரின் வேண்டுகோளை ஏற்று கதவு எண்.4–64/3 –க்கு மறு இணைப்பு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு –** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ2/192/2014)

**தீர்மானம் எண்.847 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 14**

இந்நகராட்சிக்குட்பட்ட சைமன்காலனி ரோடு, வார்டு எண்.16–ல் அமைந்துள்ள திரு.டேவிட் என்பவருக்கு சொந்தமான கட்டிடத்திற்கு 2002–03 முதல் அரையாண்டிலிருந்து வணிக பயன்பாட்டின்கீழ் 9 வரிவிதிப்புகள் செய்யப்பட்டு 2007–08 முதல் அரையாண்டு வரை சொத்துவரி செலுத்தப்பட்டுள்ளது. அதன் பின்னர் 2007–08 இரண்டாம் அரையாண்டு முதல் மேற்காணும் கட்டிடம் குடியிருப்பாக மாற்றப்பட்டுள்ளதால், அதற்கான சொத்துவரி கேட்பினை வணிக பயன்பாட்டிலிருந்து குடியிருப்பு பயன்பாட்டிற்கு மாற்றுவதற்காக கட்டிடத்தின் உரிமையாளர் மரணமடைந்து விட்டதால் அவரது மனைவி திருமதி. செல்லிஸ்மேரி என்பவர் மனு செய்துள்ளார். இது தொடர்பாக 22.10.2013–ம் தேதிய வருவாய் உதவியாளரின் அறிக்கையின்படி மேற்படி கட்டிடத்தை நேரில் சென்று ஆணையர் முன்னிலையில் அளவீடு செய்யப்பட்டு 2013–14 முதல் அரையாண்டு வரை உள்ள வரித்தொகை அலுவலகத்தில் செலுத்தப்பட்டது. மேற்படி கட்டிடத்திற்கான கேட்பினை 2013–14 இரண்டாம் அரையாண்டு முதல் குடியிருப்பு பயன்பாட்டிற்கு மாற்றவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு –** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.அ1/5934/2010)

**தீர்மானம் எண்.848 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

(ஒம்) அ.நசீர்,
நகர்மன்றத் தலைவர்
குளச்சல் நகராட்சி

(உண்மை நகல்)

ஆணையர்(பொ)
குளச்சல் நகராட்சி

# குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் அவசரக்கூட்டம் 2014 பிப்ரவரி திங்கள் 21–ம் நாள் (21.02.2014) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு நகர்மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெற்றது.

முன்னிலை:
நகர்மன்ற தலைவர்
குளச்சல் நகர்மன்றம்.

**பொருள் எண். 1**

நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அலுவலக சுற்றறிக்கை ந.க. எண்.2413/2014/அந2 நாள் 07.02.2014 மற்றும் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கடிதம் ந.க.எண்.ஜி2/4500/2014 நாள் 06.02.2014 ஆகியவற்றில் அனைத்து அரசு பணியாளர்களும் கட்டாயமாக நிழற்பட அடையாள அட்டை அணிதல் வேண்டும் என அறிவுரை வழங்கப்பட்டுள்ளதால், இந்நகராட்சியில் பணிபுரியும் அனைத்து பணியாளர்களும் நிழற்பட அடையாள அட்டை வழங்குவதற்கு நேரடியாக பெறப்பட்ட உள்ளூர் விலைப்புள்ளிகள் குறித்த விபரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1 | பாரத் ஸ்டுடியோ,<br>குளச்சல். | ரூ. 30 x 1 |
| 2 | ஸ்ரீ அமிர்தானந்த் ஸ்டுடியோ,<br>குளச்சல். | ரூ. 35 x 1 |

மேற்காணும் இரண்டு விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள பாரத் ஸ்டுடியோ, குளச்சல் நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கவும், அதற்கான உத்தேச செலவுத் தொகை ரூ.2,800/– இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு –** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.சி1/311/2014)

**தீர்மானம் எண்.849 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 2**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 24 வார்டுகளிலும் நிலுவைத் தொகை வைத்துள்ள வரிவிதிப்புதாரர்களுக்கு சொத்துவரி, குடிநீர் கட்டணம், கடை வாடகை, லைசென்ஸ் போன்ற கட்டணங்கள் செலுத்த கோரி 20.02.2014 முதல் 31.03.2014 முடிய ஒலிபெருக்கி மூலம் விளம்பரம் செய்ய ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.30,000/– க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :**_மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.அ1/4826/2009)

**தீர்மானம் எண்.850 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 3**

இந்நகராட்சிக்குட்பட்ட கிழக்கு கடற்கரை பகுதியில் சுற்றுலா பயணிகளை கவரும் வகையில் ரூ.60.00 இலட்சம் மதிப்பீட்டில் 3 இடங்களில் பூங்கா அமைப்பதற்கு திட்ட பிரேரணை சமர்ப்பிக்க இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.683 நாள் 31.07.2013–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில் இந்நகராட்சிக்குட்பட்ட கொட்டில்பாடு பகுதியில் பூங்கா அமைப்பதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.10.00 இலட்சத்தில் 90% மான்யமாகவும், மீதமுள்ள 10% ஐ இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும், திட்ட நிதியை

எதிர்நோக்கி தற்போது பொதுநிதியில் பணியினை மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு –** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/4585/2009)

**தீர்மானம் எண்.851 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 4**

இந்நகராட்சி அலுவலக பணிகள் மற்றும் வரிவசூல் பணிகளுக்கு 3 மாதத்திற்கு வாடகை ஜெனரேட்டர்கள் பயன்படுத்துவதற்கான உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.60,000/–க்கு இந்நகர்மன்றம் தனது தீர்மான எண்.806 நாள் 30.12.2013–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அதன் அடிப்படையில் 30.01.2014 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | M/s.லீலா சவுண்ட்ஸ்,<br>குளச்சல். | மதிப்பீட்டு விகிதம் |
| 2. | M/s.பிரவின் சவுண்ட்ஸ்,<br>குளச்சல். | மதிப்பீட்டை விட 0.92% அதிகம் |

மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டு விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s.லீலா சவுண்ட்ஸ், குளச்சல் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/4117/2013)

**தீர்மானம் எண்.852 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.5**

இந்நகராட்சிக்கு சொந்தமாக கலவை உரக்கிடங்கு அமைப்பதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட லியோன்நகர் உப்பளம் புறம்போக்கு நிலத்தில் IUDM 2011-12 மற்றும் 2012-13 திட்டத்தின்கீழ் உரக்கிடங்குகள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடிவுறும் நிலையில் உள்ளது. மேற்படி பணிகளை துரிதமாக செயல்படுத்த மேற்படி பகுதிக்கு செல்வதற்கு சாலை வசதி அமைப்பதற்கு ரூ.9,60,000/–க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, பணியின் அவசர அவசியம் கருதி இந்நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி, நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று 18.02.2014 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின் வருமாறு,

| | | |
|---|---|---|
| 1. | திரு.T.ஜாண் ரெக்ஸ்லின்ஜோஸ்<br>ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 0.11% குறைவு. |
| 2. | திரு.C.தேவராஜ்<br>ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 0.48% அதிகம். |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டைவிட 0.11% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.T.ஜாண் ரெக்ஸ்லின்ஜோஸ், ஒப்பந்தத்தாரரின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : 1) மேற்படி பணிக்கான மதிப்பீட்டு தொகை ரூ.9,60,000/–க்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

2) பணியின் அவசர அவசியம் கருதி இந்நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும், மதிப்பீட்டை விட 0.11% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.T.ஜாண் ரெக்ஸ்லின்ஜோஸ், ஒப்பந்தத்தாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்தரவு வழங்கவும், மதிப்பீட்டுத் தொகையினை திட்ட நிதியை எதிர்நோக்கி இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/294–2/2014)

**தீர்மானம் எண்.853 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.6**

இந்நகராட்சிக்குட்பட்ட டாக்டர் அம்பேத்கார் தினசரி சந்தையில் காய்கறிகள் விற்கும் தளத்தின் மேற்கூரை இயற்கை இடர்பாடுகளால் மிகவும் சேதமடைந்துள்ளதால் மழை மற்றும் வெயில் காலங்களில் வியாபாரிகள் மற்றும் பொதுமக்கள் மிகுந்த சிரமத்திற்குள்ளாகி வருகின்றனர். எனவே பொதுநலன் கருதி மேற்படி கூரையில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்காக ரூ.1,30,000/–க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, பணியின் அவசர அவசியம் கருதி இந்நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி, நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று 18.02.2014 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின் வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | திரு.C.சந்திரசேகர்,<br>ஒப்பந்தத்தாரர். | மதிப்பீட்டைவிட 1.03% அதிகம் |
| 2. | திரு.P.பாலகிருஷ்ணன்<br>ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 0.01% குறைவு |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டைவிட 1.01% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.P.பாலகிருஷ்ணன், ஒப்பந்தத்தாரரின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு:**1) மேற்படி பணிக்கான மதிப்பீட்டு தொகை ரூ.1,30,000/–க்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

2)பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும், மதிப்பீட்டை விட 0.01% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.P.பாலகிருஷ்ணன், ஒப்பந்தத்தாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்தரவு வழங்கவும், மதிப்பீட்டு தொகையினை இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/294–4/2014)

**தீர்மானம் எண்.854 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.7**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு சீரான குடிநீர் வழங்குவதற்காக, குடிநீர் வினியோக பணிகளில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்வதற்கும், பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்கும் 2014–15–ம் ஆண்டிற்கான மொத்த பராமரிப்பு பணிகளை ரூ.7,00,000/– மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு, இந்நகராட்சி பகுதிகள் இரண்டு மண்டலங்களாக பிரிக்கப்பட்டு மண்டலம் ஒன்றிற்கு ரூ. 3,50,000/– வீதம் பணிகளை இரண்டு ஒப்பந்தத்தாரர்கள் மூலம் மேற்கொள்வதற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

**மண்டலம் -I**

| | | |
|---|---|---|
| 1 | பொட்டல் O.H.T. | 2.00 இலட்சம் லிட்டர் |
| 2 | பர்னட்டிவிளை O.H.T. | 0.60 “ |
| 3 | பீச் O.H.T. (2 எண்ணம்) | 3.00 “ |
| 4 | கொட்டில்பாடு O.H.T. | 0.30 “ |

| | | |
|---|---|---|
| 5 | சிங்காரவேலன் O.H.T. | 0.30 " |
| 6 | கே.எஸ்.எஸ்.எஸ். O.H.T. | 3.00 " |
| | **மொத்தம்** | **9.20 இலட்சம் லிட்டர்** |

**மண்டலம் -II**

| | | |
|---|---|---|
| 1 | அலுவலக O.H.T. | 7.00 இலட்சம் லிட்டர் |
| 2 | மார்க்கெட் O.H.T. | 3.00 " |
| 3 | மாதாகாலனி O.H.T. | 3.00 " |
| | **மொத்தம்** | **13.00 இலட்சம் லிட்டர்** |

மேற்காணும் விவரங்களின் அடிப்படையில் பணிகளை மேற்கொள்வதற்கு, பணியின் அவசர அவசியம் கருதி இந்நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி, நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று 18.02.2014 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், மண்டலம் -II -க்கு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின் வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | திரு.C.சந்திரசேகர்,<br>ஒப்பந்தத்தாரர். | மதிப்பீட்டைவிட 0.04% குறைவு. |
| 2. | திரு.P.பாலகிருஷ்ணன்<br>ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 0.47% அதிகம். |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டைவிட 0.04% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.C.சந்திரசேகர், ஒப்பந்தத்தாரரின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு:** 1) மேற்படி பணிக்கான மொத்த மதிப்பீட்டு தொகை ரூ.7,00,000/–க்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

2)பணியின் அவசர அவசியம் கருதி இந்நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும், மதிப்பீட்டை விட 0.04% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.C.சந்திரசேகர், ஒப்பந்தத்தாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்தரவு வழங்குவதற்கும், மதிப்பீட்டு தொகையினை இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/294–1/2014)

**தீர்மானம் எண்.855 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.8**

இந்நகராட்சிக்கு சொந்தமான உரக்கிடங்கு அமைக்கப்பட்டு வரும் லியோன்நகர் உப்பளம் புறம்போக்கு பகுதியில் IUDM 2011-12, 2012-13 திட்டத்தின்கீழ் தற்போது திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணிகள் நடைபெற்று வருகிறது. மேற்படி பகுதியில் இந்நகராட்சி பகுதிகளில் சேகரிக்கப்படும் குப்பைகளை கொட்டி பிரிப்பதற்கு ஏதுவாக 2 எண்ணம் சிமெண்ட் தளம் (Windrows Platform) அமைப்பதற்கு, தளம் ஒன்றிற்கு ரூ.9,80,000/– வீதம் 2 சிமெண்ட் தளங்களுக்கு ரூ.19,60,000/–க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, பணியின் அவசர அவசியம் கருதி இந்நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி, நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று 18.02.2014 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், சிமெண்ட் தளம் I–க்கு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின் வருமாறு:

| | | |
|---|---|---|
| 1. | திரு.T.ஜாண் ரெக்ஸ்லின்ஜோஸ்<br>ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 0.02% குறைவு. |
| 2. | திரு.C.தேவராஜ்<br>ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 0.92% அதிகம். |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டைவிட 0.02% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.T.ஜாண் ரெக்ஸ்லின்ஜோஸ், ஒப்பந்தத்தாரரின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : 1) மேற்படி பணிக்கான மதிப்பீட்டு தொகை ரூ.9,80,000/—க்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

2) பணியின் அவசர அவசியம் கருதி இந்நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும், மதிப்பீட்டை விட 0.02% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.T.ஜாண் ரெக்ஸ்லின்ஜோஸ், ஒப்பந்தத்தாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்தரவு வழங்கவும், மதிப்பீட்டு தொகை ரூ.9,80,000/—ஐ திட்ட நிதியை எதிர்நோக்கி இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/294—3/2014)

**தீர்மானம் எண்.856 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.9**

இந்நகராட்சிக்கு சொந்தமான உரக்கிடங்கு அமைக்கப்பட்டு வரும் லியோன்நகர் உப்பளம் புறம்போக்கு பகுதியில் குப்பைகளை கொட்டி பிரிப்பதற்கான சிமென்ட் தளம் —2 (Windrows Platform-2) அமைப்பதற்காக 18.02.2014 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், சிமென்ட் தளம் I—க்கு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின் வருமாறு,

| | | |
|---|---|---|
| 1. | திரு.T.ஜாண் ரெக்ஸ்லின்ஜோஸ்<br>ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 0.02% குறைவு. |
| 2. | திரு.C.தேவராஜ்<br>ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 0.92% அதிகம். |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டைவிட 0.02% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.T.ஜாண் ரெக்ஸ்லின்ஜோஸ், ஒப்பந்தத்தாரரின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : 1) மேற்படி பணிக்கான மதிப்பீட்டு தொகை ரூ.9,80,000/—க்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

2) பணியின் அவசர அவசியம் கருதி இந்நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும், மதிப்பீட்டை விட 0.02% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.T.ஜாண் ரெக்ஸ்லின்ஜோஸ், ஒப்பந்தத்தாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்தரவு வழங்கவும், மதிப்பீட்டு தொகை ரூ.9,80,000/—ஐ திட்ட நிதியை எதிர்நோக்கி இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/294—3/2014)

**தீர்மானம் எண்.857 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.10**

இந்நகராட்சிக்கு சொந்தமான கட்டிடங்களில் சூரிய ஒளியிலிருந்து மின்சாரம் பெறுவதற்கு தகடுகள் அமைக்க (Solar Roof top panel ) நடவடிக்கைகள் மேற்கொண்டு நகராட்சிக்கு ஏற்படும் மின்கட்டணத் தொகையினை குறைக்கும் வகையில் Solar Roof top panel அமைப்பதற்கு அரசாணை எண். (MS) No.7 - நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 17.01.2012—ல் தெரிவிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.47965/2013/இ1 நாள் 03.02.2014—ல் மேற்படி பணியினை செயல்படுத்துவதற்கு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்து சமர்ப்பிக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் கீழ்காணும் பணிகள் தேர்வு செய்யப்பட்டு, மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை |
|---|---|---|
| 1 | குளச்சல் நகராட்சி அலுவலக கட்டிடத்தில் சூரிய ஒளியிலிருந்து 25 KW மின்சாரம் பெற தகடுகள் அமைத்தல். | ரூ. 25.00 இலட்சம் |
| 2 | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட கவியரசு கண்ணதாசன் வணிக வளாக கட்டிடத்தில் 15 KW மின்சாரம் பெற தகடுகள் அமைத்தல். | ரூ. 15.00 இலட்சம் |
| 3 | இந்நகராட்சி காமராஜர் பேருந்து நிலைய வளாக கட்டிடத்தில் 15 KW மின்சாரம் பெற தகடுகள் அமைத்தல். | ரூ. 15.00 இலட்சம் |
| 4 | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட கலைஞர் கருணாநிதி வணிக வளாக கட்டிடத்தில் 15 KW மின்சாரம் பெற தகடுகள் அமைத்தல். | ரூ. 15.00 இலட்சம் |
| 5 | குளச்சல் நகராட்சிக்கு சொந்தமான லியோன் நகர் நகராட்சி உர தயாரிப்பு கட்டிடத்தில் 25 KW மின்சாரம் பெற தகடுகள் அமைத்தல். | ரூ. 25.00 இலட்சம் |
| | **மொத்தம்** | **ரூ. 95.00 இலட்சம்** |

மேற்காணும் பணிகளுக்கு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்து நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு திட்ட பிரேரணை சமர்ப்பிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** :_மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/179/2013)

**தீர்மானம் எண்.858 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.11**

இந்நகராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டு பகுதி மக்களும் பயன்பெறும் வகையில் கீழ்கண்ட சாலைகள் மற்றும் வடிகால்களை சரிசெய்வதற்கு கீழ்கண்ட பணிகள் மற்றும் மதிப்பீட்டு தொகைக்கு வரும் 2014–2015ம் நிதி ஆண்டில் அந்தந்த பகுதிகளில் பணியின் அவசியத்தை கருத்தில் கொண்டு முன்னுரிமை அடிப்படையில் திட்டநிதி/ பொதுநிதியில் பணி மேற்கொள்ள மொத்த மதிப்பீட்டு தொகை ரூ.118.60 இலட்சத்திற்கு மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.

| வ எண். | பணியின் பெயர் | மதிப்பீடுதொகை (ரூ. லட்சத்தில்) |
|---|---|---|
| 1. | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1–ல் தொலைபேசி நிலைய சாலை குறுக்கு தெருவில் பேவர்பிளாக் சாலை அமைத்தல். | 3.80 |
| 2. | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.2–ல் அழகுவிளையில் வடிகால் ஓடையுடன் கூடிய பேவர்பிளாக் சாலை அமைத்தல். | 4.20 |
| 3. | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.3–ல் குளச்சல் கடை குறுக்கு தெருக்களில் வடிகால் ஓடை மற்றும் பேவர்பிளாக் சாலை அமைத்தல். | 4.00 |
| 4. | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.4–ல் ஆசாரிமார் குறுக்கு தெருக்களில் பேவர்பிளாக் சாலை அமைத்தல். | 3.60 |
| 5. | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.5–ல் குறுக்கு தெருக்களில் வடிகால் ஓடை மற்றும் பேவர்பிளாக் சாலை அமைத்தல். | 3.40 |
| 6. | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.6–ல் குறுக்கு தெருக்களில் வடிகால் ஓடை மற்றும் பேவர்பிளாக் சாலை அமைத்தல். | 3.60 |
| 7. | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.7–ல் சாம்பசிவபுரத்தில் பேவர்பிளாக் சாலை அமைத்தல். | 3.60 |

| | | |
|---|---|---|
| 8. | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.8–ல் குறுக்கு தெருக்களில் பேவர்பிளாக் சாலை அமைத்தல். | 4.00 |
| 9. | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.9–ல் குறுக்கு தெருக்களில் பேவர்பிளாக் சாலை அமைத்தல். | 3.90 |
| 10. | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.10–ல் குறுக்கு தெருக்களில் பேவர்பிளாக் சாலை அமைத்தல். | 4.00 |
| 11. | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.11–ல் குறுக்கு தெருக்களில் பேவர்பிளாக் சாலை அமைத்தல். | 3.20 |
| 12. | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.12–ல் துறைமுகத்தெருவில் வடிகால் ஓடை மற்றும் மேல் மூடி அமைத்து பேவர்பிளாக் சாலை அமைத்தல். | 3.70 |
| 13. | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.13–ல் குறுக்கு தெருக்களில் வடிகால் ஓடை மற்றும் பேவர்பிளாக் சாலை அமைத்தல். | 7.00 |
| 14. | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.14–ல் பாம்பூரிவாய்க்கால் பொழிமுகம் செல்லும் சாலையை விரிவுபடுத்தி பேவர்பிளாக் சாலை அமைத்தல். | 6.00 |
| 15. | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.15–ல் குறுக்கு தெருக்களில் வடிகால் ஓடை மற்றும் பேவர்பிளாக் சாலை அமைத்தல். | 4.00 |
| 16. | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.16–ல் முண்டம்பிலாவடி தெருவில் வடிகால் ஓடை மற்றும் பேவர்பிளாக் சாலை அமைத்தல். | 3.80 |
| 17. | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.16–ல் வாய்க்கால் தெருவில் வடிகால் ஓடை மேல்மூடி அமைத்தல். | 2.00 |
| 18. | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.17–ல் கணியாகுடிதெருவில் வடிகால் ஓடை மற்றும் பேவர்பிளாக் சாலை அமைத்தல். | 4.00 |
| 19. | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.17–ல் பள்ளிவிளாகம் குறுக்கு தெருக்களில் பேவர்பிளாக் சாலை அமைத்தல். | 3.00 |
| 20. | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.18–ல் ஈழகானிவிளை பகுதியில் பேவர்பிளாக் சாலை அமைத்தல். | 3.00 |
| 21. | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.19–ல் குறுக்கு தெருக்களில் பேவர்பிளாக் மற்றும் டைல்ஸ் அமைக்கும் பணி செய்தல். | 6.00 |
| 22. | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.20–ல் இலப்பவிளை குறுக்கு தெருக்களில் பேவர்பிளாக் மற்றும் டைல்ஸ் அமைக்கும் பணி செய்தல். | 4.00 |
| 23. | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.21–ல் காவடிவிளை முதல் பண்டகசாலைபுரம் வரை வடிகால் ஓடை மற்றும் பேவர்பிளாக் சாலை அமைத்தல். | 9.80 |
| 24. | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.22–ல் பந்தவிளை குறுக்கு தெருவில் வடிகால் ஓடை மற்றும் பேவர்பிளாக் சாலை அமைத்தல். | 10.00 |
| 25. | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.23–ல் புல்லன்விளை குறுக்கு தெருக்களில் வடிகால் ஓடை மற்றும் பேவர்பிளாக் சாலை அமைத்தல். | 7.00 |
| 26. | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.24–ல் காமராஜர் சாலை குறுக்கு தெருக்களில் வடிகால் ஓடை மற்றும் பேவர்பிளாக் சாலை அமைத்தல். | 4.00 |
| | **மொத்தம்** | **118.60** |

**அ.குறிப்பு –** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/403/2014)

**தீர்மானம் எண்.859 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 12**

இந்நகராட்சிக்குட்பட்ட துறைமுகத்தெருவில் போர் வெற்றிச் சின்னம் அருகில் ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டில் பூங்கா அமைக்கும் பணிக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை தினமணி பத்திரிக்கையின் 31.01.2014–ம் தேதிய பதிப்பில் பிரசுரம் செய்த வகையில் ரூ.3,456/– ஐ வழங்க கேட்டு பட்டியல் பெறப்பட்டுள்ளது. எனவே மேற்படி தொகையினை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு –** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/121–1/2014)

**தீர்மானம் எண்.860 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.13**

மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, நாகர்கோவில் அவர்களின் நடவடிக்கைகள் செ.மு.எண்.ஆ3/3469/2013 – நாள் 12.02.2014 –ன்படி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2013–14–ன்கீழ் குளச்சல் நகராட்சி வார்டு எண்.18–ல் பீச்ரோடு மொகைதீன்பள்ளி இடுகாடு சுற்றுசுவர் கட்டும் பணியினை ரூ.4,00,000/– மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு 25.02.2014 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றத்தின் பார்வைக்கும், தகவலுக்கும் வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு –** மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.இ1/153/2014)

**தீர்மானம் எண்.861 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண்.14**

இந்நகராட்சி பகுதிகளிலிருந்து தினந்தோறும் சேகரிக்கப்படும் 7 டன் குப்பைகளில் சுமார் இரண்டு டன் அளவிற்கு காய்கறி, பழங்கள் மற்றும் அழுகும் பொருட்கள் சேகரிக்கப்படுவதால், மேற்படி இரண்டு டன் குப்பைகளிலிருந்து 10 கிலோவாட் அளவிற்கு மின்சாரம் தயாரிக்கும் பயோ–மீத்தனைசேசன் பிளான்ட் அமைப்பதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.25,00,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு –** மேற்படி மதிப்பீட்டு தொகை ரூ.25,00,000/– ஐ திட்ட நிதியை எதிர்நோக்கி பொதுநிதியில் பணி மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.இ1/389/2014)

**தீர்மானம் எண்.862 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.15**

இந்நகராட்சி பகுதியில் எதிர்வரும் வறட்சியை எதிர்கொண்டு தட்டுபாடற்ற சீரான குடிநீர் வினியோகம் வழங்குவதற்கு ஏதுவாக மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் குறித்த விவரம் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களால் கோரப்பட்டது. அதன் அடிப்படையில் தேர்வு செய்யப்பட்ட பணிகள் குறித்த விவரம் பின்வருமாறு :

| வ எண். | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. |
|---|---|---|
| 1. | இந்நகராட்சி பாலத்தன்கரை ஆழ்துளை கிணற்றை துார் வாரி சுத்தம் செய்தல் (Flushing) | 20,000/- |
| 2 | இந்நகராட்சி கே.எஸ்.எஸ்.எஸ்.காலனி ஆழ்துளை கிணற்றை துார் வாரி சுத்தம் செய்தல் (Flushing) | 20,000/- |
| 3 | இந்நகராட்சி வெள்ளிப்பிள்ளையார் கோவில் ஆழ்துளை கிணற்றை துார் வாரி சுத்தம் செய்தல் (Flushing) | 20,000/- |

| | | |
|---|---|---|
| 4 | இந்நகராட்சி பாலத்தன்கரை ஆழ்துளை கிணற்றின் 10 HP மின்மோட்டாரை மாற்றி புதிய10 HP மின்மோட்டார் பொருத்துதல். | 70,000/- |
| 5 | இந்நகராட்சி கே.எஸ்.எஸ்.எஸ்.காலனி ஆழ்துளை கிணற்றின் 10 HP மின்மோட்டாரை மாற்றி புதிய10 HP மின்மோட்டார் பொருத்துதல். | 70,000/- |
| 6 | இந்நகராட்சி வெள்ளிப்பிள்ளையார் கோவில் ஆழ்துளை கிணற்றின் 10 HP மின்மோட்டாரை மாற்றி புதிய10 HP மின்மோட்டார் பொருத்துதல். | 70,000/- |
| 7 | இந்நகராட்சிக்குட்பட்ட மார்க்கெட் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி முதல் மரமடி சந்திப்பு வரை HDPE பைப் லைன் அமைத்தல். | 1,80,000/- |
| 8 | இந்நகராட்சிக்குட்பட்ட கொட்டில்பாடு பகுதியில் 3" பிவிசி குடிநீர் பகிர்மான குழாய் அமைத்தல். | 50,000/- |
| 9 | இந்நகராட்சிக்குட்பட்ட தொலைபேசி நிலைய சாலையில் புதிய ஆழ்துளை கிணறு மற்றும் குடிநீர் குழாய் அமைத்தல். | 5,00,000/- |
| 10 | இந்நகராட்சிக்குட்பட்ட பாலத்தன்கரை புதிய ஆழ்துளை கிணறு மற்றும் குடிநீர் குழாய் அமைத்தல். | 5,00,000/- |
| 11 | இந்நகராட்சிக்குட்பட்ட வெள்ளிப்பிள்ளையார் கோவில் பகுதியில் புதிய ஆழ்துளை கிணறு மற்றும் குடிநீர் குழாய் அமைத்தல். | 5,00,000/- |
| 12 | இந்நகராட்சிக்குட்பட்ட நரிக்கல் முதல் தைநாத்தன்கரை வரை 3" பிவிசி குடிநீர் பகிர்மான குழாய் அமைத்தல். | 7,00,000/- |
| 13 | இந்நகராட்சிக்குட்பட்ட சாஸ்தாங்கரை முதல் வெள்ளியாக்குளம் வரை 4" பிவிசி குடிநீர் பகிர்மான குழாய் அமைத்தல். | 8,00,000/- |
| | **மொத்தம்** | **35,00,000/-** |

மேற்காணும் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரி பணி உத்தரவு வழங்க தெரிவிக்கப்பட்டுள்ளதால், நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு –** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/337/2014)

**தீர்மானம் எண்.863 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.16**

இந்நகராட்சிக்குட்பட்ட துறைமுகத்தெருவில் போர் வெற்றிச்சின்னம் அருகில் பூங்கா அமைப்பதற்கான மதிப்பீட்டு தொகை ரூ.25,00,000/–க்கு இந்நகர்மன்றம் தனது தீர்மான எண்.835 நாள் 30.01.2014–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அதன் அடிப்படையில் 18.02.2014–ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப் புள்ளிகள் வரப்பட்டது. அவற்றின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | திரு.T.ஜாண் ரெக்ஸ்லின்ஜோஸ் ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 0.04% குறைவு. |
| 2. | திரு.C.தேவராஜ் ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 0.46% அதிகம். |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டைவிட 0.04% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.T.ஜாண் ரெக்ஸ்லின்ஜோஸ், ஒப்பந்தத்தாரரின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :**_மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/121–1/2014)

**தீர்மானம் எண்.864 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.17**

இந்நகராட்சியில் குடிநீர் விநியோகத் செய்ய 21 எண்ணம் ஆழ்துளை கிணற்றிலிருந்து மின்மோட்டார்கள் மூலம் 10 எண்ணம் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளுக்கு ஏற்றப்பட்டு நாள் ஒன்றுக்கு 25.60 இலட்சம் லிட்டர் விநியோகம் செய்யப்பட்டு அனைத்து பகுதி மக்களுக்கும் தினமும் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேற்படி ஒவ்வொரு ஆழ்துளை கிணற்றிலும் உள்ள குடிநீரின் சுவை வித்தியாசப்படுவதாக பொதுமக்களிடையே புகார் எழுந்துள்ளது. எனவே பாலத்தன்கரையில் 5.00 லட்சம் கொள்ளளவு கொண்ட தரைதள நீர்த்தேக்கத் தொட்டி (GLR) அமைத்து Chlorination Plant மூலம் சுத்திகரிக்கப்பட்டு 5 எண்ணம் நீர்மூழ்கி மோட்டார்கள் மூலம் (Bed type sub-mercible motar) மூலம் அனைத்து பகுதி மக்களுக்கும் சுத்திகரிக்கப்பட்ட பொதுவான சுவையுள்ள குடிநீர் வழங்கும் வகையில் தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.90,00,000/– க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மேற்படி பணியினை திட்ட நிதியில் மேற்கொள்ள அரசுக்கு கருத்துரு சமர்ப்பிக்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ2/405/2014)

**தீர்மானம் எண்.865 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.18**

இந்நகராட்சிக்குட்பட்ட கொட்டில்பாடு மற்றும் குளச்சல் கடற்கரை பகுதிகளில் காற்றின் வேகத்தை அளவிட்டு 5 கிலோவாட் அளவிற்கு மொத்தம் 50 கிலோ வாட்ஸ் மின்சாரம் தயாரிக்கும் வகையில் சிறுமின்விசை காற்றாலை 10 எண்ணங்கள் அமைப்பதற்கான உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ. 125.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மேற்படி பணியினை திட்ட நிதியில் மேற்கொள்ள அரசுக்கு கருத்துரு சமர்ப்பிக்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ2/4042014)

**தீர்மானம் எண்.866 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

(ஒம்) அ.நசீர்,
நகர்மன்றத் தலைவர்
குளச்சல் நகராட்சி

(உண்மை நகல்)

ஆணையர்(பொ)
குளச்சல் நகராட்சி

## குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் 21.02.2014–ம் தேதிய அவசரக்கூட்டத்தில் நகர்மன்றத் தலைவர் அவர்கள் கொண்டுவந்த சிறப்பு தீர்மானம் :

**சிறப்பு தீர்மான பொருள்**

குளச்சல் நகராட்சியில் பதிவு செய்யப்பட்ட சுயஉதவிக்குழுக்களுக்கு (பொன்விழா ஆண்டு நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டம்) ஸ்டேட் பாங்க் ஆப் திருவிதாங்கூர் வங்கியிலிருந்து கடன் தொகை பெறப்பட்டு குறிப்பிட்ட காலக்கட்டத்திற்குள் வட்டியுடன் சேர்த்து முழுத் தொகையினையும் செலுத்தியதற்கு பின்பும் புதிய கடனுக்காக மனு செய்து கடன் வழங்காமல் இருப்பதால் மேற்படி குழுக்கள் இதுநாள் வரை செய்து வந்த தொழில்கள் பாதிக்கப்பட்டு தொடர்ந்து தொழில்களை செய்ய முடியாத நிலையில், நகராட்சியால் பதிவு செய்யப்பட்ட குழுக்கள் தவிக்கின்றன. மக்களின் வரிப்பணம் மற்றும் அரசு தரப்பிலிருந்து வரும் திட்டப்பணிகளுக்கான தொகையும் மேற்குறிப்பிட்ட வங்கியில் டெபாசிட் செய்யப்பட்டு வருகிறது. எனவே நகர மக்களுக்கும், நகராட்சியால் பதிவு செய்யப்பட்ட குழுக்களுக்கும் பயன்படாத இந்த வங்கியில் நகராட்சி நிதியினை டெபாசிட் செய்வதை நிறுத்தி வைத்து வேறு தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் டெபாசிட் செய்திட சிறப்பு தீர்மானமாக நிறைவேற்றலாம்.

**தீர்மானம் எண்.867 ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. சிறப்பு தீர்மானமாக நிறைவேற்றப்பட்டது.**